# உயர்தொடக்க வகுப்பு தமிழாசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்த செயல்பாடுகளை வடிவமைத்து செயல்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல்

## செயல் ஆராய்ச்சி அறிக்கை

2023 – 2024


செயல் ஆய்வாளர்
சி. ஜானகி, விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி



சமர்ப்பித்தல்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை–06

ஏப்ரல் –2024

## நன்றியுரை

செயல் ஆராய்ச்சி செய்ய அனுமதித்து ஆவனம் செய்த மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், Dr. N. லதா, அவர்கள் மற்றும், இணைஇயக்குநர்கள் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரியான முறையில் செயல் ஆராய்ச்சி தலைப்பு தெரிவுசெய்து திறம்பட நடத்திட கலந்தாய்வு செய்து அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தந்து ஊக்கப்படுத்திய மண்டல அளவிலான திட்ட ஆராய்ச்சி குழுத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயல் ஆராய்ச்சி செய்திடும் வகையில் நிதியுதவி வழங்கிய முதல்வர் முனைவர். வெ ஹேமலதா, அவர்களுக்கும் செயல்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆர். பார்வதி, முதுநிலை விரிவுரையாளர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கின்றேன்.

சிறப்பாக அமைய நற்கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கி உற்சாகப்படுத்திய முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயல் ஆராய்ச்சிச்யைச் சிறப்பாக பள்ளிகளில் செயல்படுத்த அனுமதி வழங்கிய கல்வி அலுவலர்களுக்கும், செயல் ஆய்விற்கு உதவிய ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம்: கிருஷ்ணகிரி சி.ஜானகி, விரிவுரையாளர்,
நாள்:

# சான்று

"உயர்தொடக்க வகுப்பு தமிழாசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்த செயல்பாடுகளை வடிவமைத்து செயல்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல்" என்னும் தலைப்பில் இச்செயல் ஆராய்ச்சியினை திருமதி. சி. ஜானகி, விரிவுரையாளர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழ்ப்பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களுக்கு இந்தச் செயல் ஆராய்ச்சியினை மேற்கொண்டு நன்முறையில் முடித்தார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

இடம்: கிருஷ்ணகிரி
நாள்:

முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி

# ஆய்வாளர் உறுதி மொழி

சி. ஜானகி,
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன செயல் திட்ட ஆய்வுப் பணிக்காக" உயர்தொடக்க வகுப்பு தமிழாசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்தசெயல்பாடுகளை வடிவமைத்து செயல்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல்" என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வுக் கட்டுரை என்னால் [சி. ஜானகி] உருவாக்கப்பட்டது என்றும் வேறு எதிலிருந்தும் எடுத்தாளப்பட்டதல்ல என்றும் உறுதி கூறுகிறேன்.

**ஆய்வாளர்**

**சி.ஜானகி, விரிவுரையாளர்**

**ஒப்புவிப்பு:**

**முனைவர்.வெ. ஹேமலதா,**
**முதல்வர்,**
**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**கிருஷ்ணகிரி**

# செயலாய்வுக் கருத்துரு (Action Research Abstract)

**1.செயலாய்வு எண்:** 04

**2.செயலாய்வர் பெயர்:** சி. ஜானகி, விரிவுரையாளர்,

3.**நிறுவனத்தின் பெயர்**: DIET, கிருஷ்ணகிரி.

**4.தலைப்பு:** உயர்தொடக்க வகுப்பு தமிழாசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்த செயல்பாடுகளை வடிவமைத்து செயல்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல்

**5.ஆய்வு நோக்கம்:**

- கற்றல் விளைவுகள் சார்ந்த் செயல்பாடுகளை வடிவமைக்கும் திறனை வலுப்படுத்துதல்
- கற்றல் விளைவுகள் சார்ந்த பாடப்பொருளில் உயர் நிலை வினாக்கள் தயாரிக்கும் புரிதலை மேம்படுத்துதல்

**6. ஆய்வு மாதிரி:**

மத்தூர் மற்றும் பர்கூர் ஒன்றிய, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 20 தமிழ் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் இச்செயலாய்வு மாதிரிகளாக தேர்வு செய்யப்பட்டது.

**7. ஆய்வுக் கருவி**

முன் தேர்வு, பின் தேர்வு– வினாத்தாள்நிரல் (Questionnaire) பல்வுள் தெரிவு வினா, குறுவினா ஆகிய வினாக்கள் 25 மதிப்பெண் அடங்கிய வினாக்களின் தொகுப்பு செயலாய்வாளரால் தயாரிக்கப்பட்டு முன்தேர்வு மற்றும் பின்தேர்வு நடத்தப்பட்டது.

## 8.ஆய்வு முறை

பரிசோதனை முறையில் (Experimental Method ) ஒற்றைக்குழு அமைப்பு சோதனை முறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுச் சார் கற்பிக்கும் முறைகள்**

- விதி வருமுறை
- விதிவிளக்கு முறை
- விளையாட்டு முறை

## 9. செயல்பாடுகள்:

1. புறாக்களின் விருந்தோம்பல் (கதை)
2. மாவட்டத்தின் பெயரைக்கூறு ஒற்றுமையைக் கண்டுபிடி
3. சுருக்கி எழுதும் முறை
4. பெயரைக் கூறு ஊரைக்கண்டுபிடி
5. பெயரைச் சொல் துறையைக் கண்டுபிடி
6. பெயரைச் சொல் சிறப்பைக்கூறு
7. பொருத்தம் பார்த்தல்

## 10. ஆய்வின் மூலம் கண்டறிந்த உண்மைகள்:

- செயலராய்ச்சியின் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள், கட்டகம் மற்றும் காணொளிகள் வழங்கப்பட்டதின் மூலம் ஆசிரியர்களிடம் கற்றல் விளைவுகள் சார்ந்த செயல்பாடுகளை வடிவமைப்பதிலும் புரிந்துகொள்வதில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது.
- செயலராய்ச்சியின் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் மற்றும் காணொளிகள் வழங்கப்பட்டதின் மூலம் ஆசிரியர்களின் முன் தேர்வு அடைவு சராசரி 36.58% – இலிருந்து 88.00% ஆக உயர்ந்தது.

- முன்தேர்வில் ஆண் ஆசிரியர்களின் முன் தேர்வு அடைவு சராசரி 38.6% பின்தேர்வில் ஆண் ஆசிரியர்களின் சராசரி மதிப்பெண்கள் 87.3% ஆகும்.
- முன்தேர்வில் பெண்ஆசிரியர்களின் அடைவு சராசரி 35.5% பின்தேர்வில் பெண் ஆசிரியர்களின் சராசரி மதிப்பெண்கள் 90.3% ஆகும்.
- மத்தூர் ஒன்றிய ஆசிரியர்களின் பின் தேர்வு சராசரி 85.00% பருகூர் ஒன்றிய ஆசிரியர்களின் பின் தேர்வு சராசரி 91.00% ஆகும்.
- இலக்கணப் பாடப்பகுதியில் செயல்பாடுகளை வடிமைத்ததிலும் உயர்நிலைத்திறன் வினாக்களை உருவாக்குவதிலும் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது.

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கஎண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | செயலாய்வின் தேவை  மற்றும் முக்கியத்துவம் | 32 |
| 3. | செயலாய்விற்கான காரணங்கள் | 32 |
| 4 | ஆய்வுத் தலைப்பு (Satement of the problem) | 33 |
| 5 | செயல் திட்ட ஆய்வின் நோக்கம் | 33 |
| 6 | செயல் திட்ட ஆய்வின் கருதுகோள்கள் | 33 |
| 7 | ஆய்வுமாதிரி | 33 |
| 8 | ஆய்வு வடிவமைப்பு | 33 |
| 8.1 | ஆய்வு முறை | 34 |
| 8.4 | ஆய்வு இடையீட்டுச் செயல்பாடுகள் (Intervention | 34 |
| 8.3 | பயிற்சிக் கட்டகம் | 34 |
| 9 | ஆய்வுக்கருவி | 40 |
| 10 | தரவுகளைப் பகுப்பாய்வுச் செய்தல் ( | 40 |
| 11 | ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்த உண்மைகள் | 46 |
| 12 | வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்குதலும் | 47 |
| 13 | நிறைவுரை (Conculsion | 47 |
| 14 | மேற்கோள் நூல்கள் | 48 |
| 15 | பின்னிணைப்புகள்  –<br>ஆசிரியரின் முன் மற்றும் பின் தேர்வு | 49 |
| 16 | ஆய்வுக்கருவி | 51 |
| 17 | பயிற்சிக் கட்டகம் | 53 |
| 18 | நிழற்படத்தொகுப்பு | 80 |

1. முன்னுரை:

இந்தியாவில் பல்வேறு வகையான கற்றல் சூழல்கள்/ தரமான கல்வி அளித்தல் இன்று உலகளவில் முக்கியமான பிரச்சனையாக உள்ளது. உலக அளவிலான நிலையான வளர்ச்சி இலக்குகளின்படி இந்தியாவில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டயாக் கல்வி உரிமைச் சட்டம் (RTE) 2009 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது 6 முதல் 14 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வியைப் பெறுதலை உறுதி செய்கிறது. இந்நிலையில் கல்வியின் இலக்குகள் பாடங்களைக் கற்றல் என்பதைத் தாண்டி விரிந்த தொலைநோக்கினைக் கொண்டதாக அமைய வேண்டும். கற்றல் விளைவு மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009" அதனடிப்படையில், குழந்தைகளுக்க உள்ளடக்கியதாக உள்ளது.

தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு வகுப்பு வாரியான சுற்றல் விளைவுகளைத் தயாரிக்கும் பணி மனித வள மேம்பாட்டுத்துறையால் வழங்கப்பட்டது. இந்நிறுவனம் சூழ்நிலையியல், அறிவியல், கணிதம், சமூக அறிவியல், இந்தி, ஆங்கிலம் மற்றும் உருது ஆகிய பாடங்களுக்கான சுற்றல் விளைவுகளை உருவாக்கியுள்ளது. இவை கலைத்திட்ட எதிர்பார்ப்புகள் மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.)

வாய்ப்புகள் இருப்பதால் இரண்டு ஆவணங்களும் (முக்கிய மற்றும் அடக்கமான) அனைத்து மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் கருத்துகளைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டன. அவர்களின் கருத்துகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுப் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நவம்பர் 2016இல் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள் அனைவருக்கும் கல்வி இயக்க அலுவலர்கள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்/மாநிலக் கல்வி நிறுவனம்

மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள்) இந்த ஆவணங்கள் தொடர்பான தங்கள் கருத்துகளை அளித்தனர். தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் அரசுசாரா அமைப்புப் (NGOs) பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்கள். இறுதியாகப் பொதுமக்களின் கருத்துகள் மற்றும் பின்னூட்டங்களைப் பெறுவதற்காக, இது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. அவர்களின் பின்னூட்டங்கள் மற்றும் கருத்துகள், இந்த ஆவணங்களில் சேர்க்கப்படும்முன் கவனத்தில் கொள்ளப்பட்டன. அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் 2017– 18ஆம் கல்வி ஆண்டு முதல் இந்த ஆவணம் நடைமுறைப்படுத்தப்படும்.

இது அடைவுத்தேர்வினை நடத்துவதற்குத் தேவையான குறிப்புதவி நூலாக அமையும். பள்ளி மாணவர்களின் கற்றல்நிலைகளை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான அளவீடுகளை நிலைப்படுத்தும் வகையில் இந்த ஆவணம் செயல்படும். மேலும், இது, ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் அனைத்துப் பள்ளிசார் அமைப்புகளுக்குப் பள்ளிக்கல்வியின் தொடக்க நிலையில் கற்றலின் தரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும். கல்வி தொடர்பான அனைத்து அங்கத்தினருக்கும் கற்றல் விளைவுகளை முறையாக நடைமுறைப்படுத்தத் தேவையான அனைத்து உதவிகளையும் தேசிய அளவில் தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் மாநில அளவில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் அளிக்கும்.

நாட்டின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதில் தொடக்க நிலைக்கான கற்றல் விளைவுகள் ஒரு சிறந்த கருவியாக அமையும் என்பதை உறுதியுடன் தெரிவிக்கிறேன்.

குழந்தைகள் பள்ளியில் நுழையும் பொழுதே தங்களுக்கேயுரிய கற்றல் அனுபவங்களோடு வருகின்றனர். குழந்தைகளிடம் உள்ள கற்றல்

அனுபவங்களை மேலும் மேம்படுத்தும் பொறுப்பினைப் பள்ளி மேற்கொள்கிறது. எனவே, எந்தவொரு நிலையிலும் அல்லது வகுப்பிலும் 'கற்றல் இல்லா நிலையிலிருந்து' கற்றல் தொடங்குவது இல்லை. மானாவர்களின் கற்றலை மேம்படுத்துபவராகவும் வழி நடத்துபவராகவும் செயல்படும் ஆசிரியர்கள் பல்வேறு கற்றல் உத்திகள் குறித்தும் குழந்தைகளின் கற்றல் முன்னேற்றம் குறித்தும் தெரிந்திருக்க வேண்டும். இது அனைவருக்கும் தரமான கல்வி அளித்தலில் முக்கியமானதாக அமைகிறது. இப்பிரச்சினை குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, இந்தியாவின் பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் உலக அளவிலான நிலையான மேம்பாட்டு இலக்குகள் போன்றவற்றில் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது.

கல்வியில் தரமேம்பாடு என்பது கற்போரின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கொண்டதாகும். எனவே, கல்வி அமைப்பானது ஒவ்வொரு குழந்தையும் கல்வி கற்று முன்னேற்றம் அடையத் தேவையான சாதகமான சூழலை உறுதிப்படுத்துதல் அவசியம். இதற்குத் தரமான கலைத்திட்டம் மற்றும் அதனை முறையாக நடைமுறைப்படுத்துதலுக்கு உகந்த சூழலை நோக்கமாகக் கொண்ட பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது. ஒவ்வொரு குழந்தையின் கற்றல் முன்னேற்றத்தினை ஆசிரியர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்குத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினைக் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 வலியுறுத்துகிறது. மேலும் ஆசிரியர்கள், குழந்தைகளின் கற்றல் இடைவெளிகளைக் கண்டறியவும், அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் சரிசெய்து, மனஅழுத்தம் இல்லாத, சூழ்நிலையில் குழந்தைகளின் வளர்ச்சியினை ஊக்குவித்தலையும் இது வலியுறுத்துகிறது. தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தொடக்க மற்றும் உயர்தொடக்க நிலைகளில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டிற்கான

சிறப்புக் கட்டகங்களை உருவாக்கியுள்ளது. இக்கட்டகங்கள் கற்றல் கற்பித்தல் நடைபெறும்போது எவ்வாறு தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதைப் பாடவாரியான எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளன. ஆனால், தற்போதுள்ள சூழ்நிலையில், மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், சமுதாய உறுப்பினர்கள் மற்றும் கல்வித்துறை நிருவாகிகள் போன்றோ மாணவர்களின் கற்றலை அறிந்துகொள்ள ஆர்வத்துடன் இருப்பதுடன், தங்கள் குழந்தைகளி கற்றல் மேம்பாட்டினைக் கண்காணிக்கின்றனர். அவர்களுக்கு, எதிர்பார்த்த கற்ற அடைவினைக் கண்காணிக்க, சில வரன்முறைகள் தேவைப்படுகின்றன. கற்றல் தொடர்ந் நிகழ்ந்துவரும் நிலையில், குழந்தைகள் எவ்வாறு உள்ளனர் என்பதைக் கல்வித்துனா

'அனைவருக்கும் கல்வி' தொடர்பான ஆய்வு வெளியீடுகள் கடந்த முப்பதாண்டுகளில் கல்வியின் தர சிற்ஜன வழியுறுத்தியுள்ளன. இவை, மாணவர்களைப் பள்ளியில் சேர்த்தல் , தக்கவைத்தல்  மற்றும கற்றல் அடைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டுள்ளன. இவை கற்போரின் பண்புநலன்கள், கற்றல் செயல்பாடுகள், வசதிவாய்ப்புகள், கற்றல்பொருள்கள், பாடப்பொருள், நிருவாகம், மேலாண்மை மற்றும் கற்றல் விளைவுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

'அனைவருக்கும் கல்வி' மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 ஆகியவை சுற்றலின் தாத்தைத் தொடர்ந்து மேம்படுத்த வலியுறுத்தியுள்ளன. தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தேசியக் கலைத்திட்ட வடிவமைப்புகள் மற்றும் அரசின் முக்கியச் செயல்பாடுகள் அனைத்தும், தரத்தினை முதன்மை இலக்காகக் கொண்டுள்ளன. இவை அனைத்துக் குழந்தைகளும் கற்றலுக்குத் தேவையான அடிப்படைத்திறன்களைப் பெறுதல் மற்றும் அவர்கள் பன்னாட்டுக் குடிமக்களாக மாறத்தேவையான அடிப்படைத்

திறன்களைப் பெறும் வாய்ப்பினைப் பெறுதல் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இதற்குத் தெளிவான மற்றும் அளந்தறியத்தக்க இலக்குகள் தேவைப்படுகின்றன. எனவே, கல்வி அமைப்பில், நிருவாகிகள், திட்டமிடுவோர் மற்றும் கொள்கைகளை உருவாக்குவோர் அறிவுப்பூர்வமான முடிவுகளை மேற்கொள்ள, கல்வி அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தேசிய மற்றும் மாநிலக் கல்விசார் அமைப்புகளுக்குத் தெரிவித்தல் இன்றியமையாததாகும். தேசிய மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் பல்வேறு அடைவுத் தேர்வுகள், இதற்கான முன்முயற்சிகளாகும். மேலும், பள்ளி, சமுதாய அளவில் உள்ள பல்வேறு அங்கத்தினர், கல்வியின் தரமேம்பாட்டிற்கு முக்கியப் பங்காற்றுகின்றனர்.

கற்றல் இலக்குகள், வகுப்பு வாரியாகவும், பாட வாரியாகவும், திறன்களின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டன. இவை கற்றலின் முடிவினை மட்டும் அளந்தறிவதுடன், இவற்றைப் பயன்படுத்தி, குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை அளந்தறியும் வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருந்தது. கலைத்திட்டச் செயல்பாட்டின் மையயர்கள் குழந்தைகள் தாங்களாகவே அறிவினை உருவாக்கும் திறனை இயற்கையாகப் பெற்றுள்ளதாகக் கடந்த பத்தாண்டுகளில் கண்டறிந்த பின் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது ஆசிரியர்களைக் கல்விச் செயல்பாடுகளின் ஏதுவாளர்களாக மாற்றியுள்ளது. அவர்கள் பெறும் அறிவு, அவர்கள் உலகைச் சுற்றியுள்ள அனைத்துச் செயல்களிலும் ஈடுபட்டு, கண்டுபிடித்து, கருத்துகளைத் தெரிவித்து, அதன் பொருளை உணர்ந்து செயல்பட்டதன் விளைவாகும். இதன்மூலம், கற்றல் செயல்பாடுகளுக்கான முக்கியத்துவம் மாறியுள்ளதை அறியமுடிகிறது. கருத்துத்தெளிவு, ஒரு தொடர்செயலாக அமைந்துள்ளது. அதாவது, பெற்ற அறிவினை அதிகரித்து, மேம்படுத்தி, பல்வேறு சுற்றல் அடுக்குகளை உருவாக்கி, உணர்வுகளை அறிவு வளர்ச்சியின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கொண்டு, கருத்தியல் சிந்தனை மற்றும் கருத்தினைப் புரிந்து

வெளிப்படுத்துதல் போன்றவற்றை வளர்த்து, பொருளினை அறிதல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. கல்வியின் மூலம் குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சி என்பது குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009இல் கருத்தாகக் கொள்ளப்பட்டு, அது அவர்களின் அடிப்படை உரிமையாகவும், அனைத்துக் கொள்கை ஆவணங்களின் முதன்மைக் கருத்தாகவும் அமைந்துள்ளது. தொடக்க நிலைக்கான குறைந்தபட்சக் கற்றல் அடைவுகள் ஆவணம் குழந்தைகளின் உணர்வுசார் மற்றும் உளஇயக்கசார் கற்றலைக் கையாளும் சிரமத்தினை வெளிப்படுத்தியுள்ளது. எழுத்துத்தேர்வு மூலம் உணர்வுசார் கூறுகளை நுட்பமாக அளவிடுதல் கடினத்தன்மை நிறைந்ததாகவும், ஆசிரியருக்கு ஆசிரியர் மாறுபட்டதாகவும், அவை தனியாள் முன்னுரிமை மற்றும் தவறான எண்ணங்கள் போன்றவற்றால் மாறுபட்டதாகவும், முழுமையான வளர்ச்சி உறுதியாக இல்லாததாகவும் அமைந்து அளவீட்டினை எண்ணில் வெளிப்படுத்த முடியாததாக இருப்பதுடன் சிறப்பு உள்ளீடுகள் மற்றும் செயல்பாடுகளின் இறுதி விளைவாக அமைந்துள்ளது. இந்தக் கற்றல் விளைவுகள் ஆவணம், சிறப்புச் செயல்பாடுகள் மற்றும் உள்ளீடுகளின் இறுதி விளைவாக மட்டும் இல்லாமல், குழந்தைகளை வளர்ச்சிநிலைச் செயல்பாடுகளின் பகுதியாகக் கொண்டு அவர்களின் ஆளுமை மாற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

இதனடிப்படையில், ஒட்டுமொத்தச் செயல்பாட்டினையும், ஒரு புதிய கண்ணோட்டத்தில் மீளாய்வு செய்து, தொடக்கக் கல்விக்கான பல்வேறு கலைத்திட்டப் பகுதிகளுக்குக் கற்றல் விளைவுகள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

குழந்தையின் மொழியியல் திறன் வளர்ச்சிக்கும் இதுவே பொருத்தமானதாகும். குழந்தைகள், பள்ளிக்கு வந்த பிறகு தங்கள் கருத்துகளை எவ்வித அச்சமும் தயக்கமும் இன்றி வெளிப்படுத்த

இயலாமையை உணருகின்றன. ஏனெனில், தங்களின் கருத்துகள், அனுபவங்கள். உணர்வுகள் ஆகியவற்றைத் தாங்கள் விரும்புகிற மொழியில் விரும்புகிற வகையில் இயற்கையாக வெளிப்படுத்துவதைக் கல்வி நிலையங்கள் ஏற்றுக்கொள்வதோ/பயன்படுத்துவதோ இல்லை.

மொழி கற்பித்தல் என்பது, பன்மொழிச் சூழலில் உற்று நோக்கப்படுதல் / உணர்தல் வேண்டும். குழந்தைகள் பல்வேறு மொழிப்பண்பாட்டுப் பின்புலங்களில் இருந்து வருகின்றன. இங்கே அவர்களின் மொழி வரவேற்கப்படல் வேண்டும். ஏனெனில், அவர்களின் மொழியை அலட்சியப்படுத்துதல் என்பது, அவர்களின் இருத்தலை மறுப்பதாகவே புரிந்துகொள்ளப்படும்.

தொடக்கநிலையில் மொழி கற்றல், கற்பித்தலில் இது மிகவும் இன்றியமையாத காரணியாகும். மாணவர்கள் தங்களுக்கு அறிமுகமான அல்லது அறிமுகமில்லாப் புதிய சூழல்களில் பொருத்தமாக மொழியைப் பயன்படுத்தும் திறன் படைத்தவர்களாதல் வேண்டும். அவர்கள் இயல்பாகவும், கற்பனையுடன் கூடிய பயனுள்ள வகையிலும் பல்வேறு வழிகளில் எழுத இயலும் தன்மை பெறுதல் வேண்டும். சரியான சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் மொழியைப் பயனுடையதாகவும், நேர்மறையான எண்ணத்தை வளர்த்துக்கொள்வதாகவும் அமைதல் வேண்டும். மேலும், மாணவர்கள் தங்களின் முந்தைய அறிவின் அடிப்படையில் சொற்களின் உள்ளார்ந்த பொருண்மையைப் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்கள் வாயிலாகப் பொருண்மையை உருவாக்குதல் வேண்டும்.

அப்படிப்பட்ட சூழல்களில், சில நூல்களைப் படிக்கும்போது, பின்னர் வரும் பகுதியின் பொருளை உணர, நாம் முன்னர் படித்த பகுதிக்குத்

திரும்பவும் வரவேண்டியிருக்கலாம். இவ்வாறு 'படித்தலைத் திரும்பவும் செய்தல்' என்பதானது பொருண்மை தேடலுக்குச் சான்றாகும்.

படித்தலின்போது பொருண்மையைக் கட்டமைப்பதற்கு, பின் உண்மையை நினைவில் கொள்ளுதல் இன்றியமையாதது ஆ பொருண்மை என்பது, சொற்களின் அல்லது தொடர்களின் உள்ளே மட்டுமே மறைந்திருக்கவில்லை. மாறாக, அது நூலின் முழுமைத் தன்மைய பொதிந்திருக்கக் கூடியது. பலநேரங்களில் வரிகளுக்கிடையில் படித்து நூலில் எழுத்துகளின்வழி கூறப்படாதவற்றையும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. படிக்கும் பாடப்பகுதிகள், சில நூல்கள் தங்களுக்கே ஒருமைத்தன்மையுள்ள (unique) அமைப்பு உடையனவாக இருக் இத்தனித்துவமான கட்டமைப்பைப் புரிந்துகொள்வதும் அப்பகுதியின் பொருண்மையை உருவாக்குதலில் உதவியாக இருக்கும்.

எழுதுதல் என்பது, குழந்தைகள் விரும்பும் வகையில் அவர் கற்பனைக்கும் எண்ணத்திற்கும் ஏற்ப அவர்களது சொந்த மொழியில் எழுதக்கூடிய உரிமையைக் கொடுக்கும்போது மட்டுமே, பொருண்மையுள்ளதாக அமையும்.

குழந்தைகள், கரும்பலகையின்மீது எழுதப்பட்டதையோ, அச்சிடப்பட்ட நூல்களையோ, ஆசிரியர்களால் எழுதப்படும் கடிதங்ககளையோ பார்த்து எழுதுவதைக்காட்டிலும், தமது சொந்த நடையில் எழுதுவதற்கான திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற வாய்ப்புகளை அளித்தல் வேண்டும்.

பாடங்களைப் படித்துப் பயிற்சியில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுதல் மட்டுமே படித்தல், எழுதுதல் திறன்களைக் கற்பதன் நோக்கமல்ல. மாறாக, படித்தல், எழுதுதல் திறன்களைக் கற்பதன் நோக்கம், இத்திறன்களை அல்லது அறிவைத் தங்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த இயலும் தன்மையைப் பெறுவதாகும். அவர்கள், தங்கள்

வாழ்க்கையின் பல்வேறு தேவைகளுக்காகப் படிக்கவும் எழுதவும் இயலுதல் வேண்டும்.

படித்தல்,எழுதுதல் முறைகள் வெவ்வேறு நோக்கங்களுக்கு மாறுபடும் என்ற உண்மையைப் படித்தல், எழுதுதல் கற்றலின் போது நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

நமது நோக்கங்களும் படிக்கும் முறையும் நாம் ஒன்றை படிப்பதற்கான நோக்கத்தைச் சார்ந்தது. ஒரு விளம்பரத்தைப் படிப்பதற்கும் அறிவிக்கையைப் படிப்பதற்கும் நிறையவேறுபாடுகள்உள்ளன.

நாம் எழுதுவதைப் படிப்பவர் யார் என்பதும் எழுதும் சூழலில் மிக இன்றியமையாத ஒன்றாகும். நாம் யாருக்காக எழுதுகிறோம்? நமது பள்ளியின் விளையாட்டுப் போட்டிகள் குறித்த அறிக்கையைத் தயார் செய்யும்போது பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோர் அந்த எழுத்தினைப் படிப்போர் ஆவர். அத்தகவல் சுற்றியுள்ள சமூகத்திற்கும், மாணவர்களின் பாதுகாவலர்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டுமாயின் அவர்களும் நமது 'படிப்போர்' பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவ்விரு சூழலிலும் நம் எழுத்து நடையும், மொழியின் தரமும் வேறுபட்டதாக இருத்தல் இயற்கையானதே. அதுபோலவே ஒன்றைப் படிப்பதற்கான நமது நோக்கம், படிக்கும் முறையையும் இயல்பையும் முடிவு செய்கிறது. உங்கள் பள்ளி ஆண்டுவிழா தொடர்பான அறிவிக்கையைப் படிக்க விரும்பும் நீங்கள் விழாநாள், நிகழ்விடம், நேரம் போன்ற சில இன்றியமையாத விவரங்களின்மீது கவனம் செலுத்துவீர்கள். நீங்கள் சில கதைகளைப் படிப்பீர்களானால், அவற்றின் பாத்திரப்படைப்புகள், நிகழ்வுகள் குறித்து ஆழமாகச் சிந்திப்பதுடன் இக்கதைகளில் நிகழ்வுகளின் போக்கை மாற்றியமைப்பது எது எனவும் பலவாறாகப் பகுத்தாயத் தொடங்குவீர்கள். படித்தல், எழுதுதல் செயல் முறைகள் பல்வேறு பரிமாணங்களின் (dimensions) படிநிலைகளைக்

கொண்டதுடன், அவை ஒவ்வொன்றும் தம் அளவில் இன்றியமையாதவையும் ஆகும். அவை அனைத்திற்கும் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயல்முறையின்போது உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

தொடக்கக் கல்வி நிலையில் குழந்தைகளின் எழுத்து அல்லது பேச்சுப் புத்தகங்கள் குறித்துக் கேள்வி கேட்க வேண்டும். கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். குழந்தைகளுக்கு இலக்கணம் நன்கு தெரியும் என்பதற்கு அவர்களின் மொழியே சான்றாகும். அறிநிலையில் இலக்கணத்தைப் புரிந்துகொள்ளச் செய்வதற்கு இலக்கணத்தின் பல்வேறு கூறுகளைப் பாடப்பகுதிகள், பயிற்சிகள் ஆகியவற்றின்வழி அவர்களின் சூழலோடு தொடர்புபடுத்தி அறிமுகம் செய்ய வேண்டுவதும் இன்றியமையாதது.

மொழியின் பல்வேறு பயன்பாடுகளின் பக்கம் குழந்தைகளின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் அவர்கள், மொழியின் திட்ப நுட்பங்களால் கவரப்பெற்று அவற்றைத் தங்களின் சொந்தமொழியில் பொருத்தமானல...

தொடக்கக் கல்வி நிலையில் குழந்தைகளின் எழுத்து அல்லது பேச்சுப் புத்தகங்கள் குறித்துக் கேள்வி கேட்க வேண்டும். கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். குழந்தைகளுக்கு இலக்கணம் நன்கு தெரியும் என்பதற்கு அவர்களின் மொழியே சான்றாகும். அறிநிலையில் இலக்கணத்தைப் புரிந்துகொள்ளச் செய்வதற்கு இலக்கணத்தின் பல்வேறு கூறுகளைப் பாடப்பகுதிகள், பயிற்சிகள் ஆகியவற்றின்வழி அவர்களின் சூழலோடு தொடர்புபடுத்தி அறிமுகம் செய்ய வேண்டுவதும் இன்றியமையாதது.

மொழியின் பல்வேறு பயன்பாடுகளின் பக்கம் குழந்தைகளின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் அவர்கள், மொழியின் திட்ப நுட்பங்களால்

கவரப்பெற்று அவற்றைத் தங்களின் சொந்தமொழியில் முறையில் பயன்படுத்தச் செய்தல் வேண்டும். ஒரு படிநிலையில் பின்பற்றப்படும் செயல்முறைகள் வேறொரு படிநிலையில் பயன்படுத்தக் கூடியனவாக இருக்கலாம் என்பதை, மொழி கற்றல், கற்பித்தல் செயல்முறைகளைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்துவோர் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஆர்வத்தைத் தூண்டக்கூடிய கற்பித்தல் பொருள்களை / உத்திகளை மாணவர்களின் நிலை / வகுப்பிற்கு ஏற்பத் தெரிவுசெய்து பயன்படுத்துவதன் வாயிலாக அவர்கள் இந்த மொழியின் பல்வேறு நடைகளையும் அவற்றின் சாயல்களையும் திறம்படப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெறுவர். இந்தச் சூழலில் குழந்தை இலக்கியம் என்பது, ஆர்வமூட்டுவதாகவும் பல்வேறுபட்ட தன்மை மிக்கதாகவும் இருத்தல் இன்றியமையாதது. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மொழி சார்ந்த திறன்கள் யாவும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை என்பதுடன் ஒரு திறன் மற்றொரு திறனின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையும். எனவே, இத்திறன்களைத் தனித்தனியாகக் காணுதல் இயலாது. மொழித்திறன்களைப் பெறும் முறைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; மேலும் ஒருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழித்திறன்களை ஓரளவு பெற இயலும்.

ஒரு கருத்தாடலை / ஆய்வுரையைத் தொடங்கி வைத்தல், ஒருவரின் எதிர்வினையைக் கேட்டறிந்த பின்னர், வினாக்கள் எழுப்புதல், அல்லது ஒரு கட்டுரையைப் படித்தல் ஆகியன படித்தல் திறனோடு மட்டுமின்றிக் கேட்டல், பேசுதல் ஆகிய பிற திறன்களோடும் தொடர்புடையன. எழுதுதலிலும் கூட எதிர்வினைகள், கருத்துரை பகர்தல், வினாக்கள் எழுப்புதல் ஆகியவற்றிற்கு இடமுண்டு. இவ்வாறாக மொழிப்பாட வகுப்பறையில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் திறன்கள் யாவும் ஒன்றோடொன்று தொடர்புள்ளனவாகத் திகழும்.

## 1.2.பாடத்திட்டம் தொடர்பான சில எதிர்பார்ப்புகள்

கற்றல் கற்பித்தல் செயல்முறை பற்றிய சில குறிப்புகள், விரும்பத்தக்க கற்றல் விளைவுகள் ஆகியன இதுவரை மேலே கூறப்பட்ட காரணிகளைக் கருத்தில்கொண்டு இங்கே தரப்பட்டுள்ளன.

பாடத்திட்டம் குறித்த சில எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதில் கற்றல் செயல்முறைகள் இன்றியமையாத பங்கு வகிக்கின்றன. மேற்கூறிய கற்றல் செயல்முறைகளின்றி விரும்பத்தக்க கற்றல் விளைவுகளை அடைதல்.இக்கற்றல் விளைவுகள் யாவும் தமிழ் மொழியை முதல் அல்லது இரண்டாம் மொழிப் பாடமாகக் கொண்டு பயிலும் குழந்தைகளை மனத்திற்கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளன.

**முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை**

- ❖ பிறர் பேசுவதை ஆர்வமுடனும் பொறுப்புடனும்/கவனத்துடனும் கேட்டல்.
- ❖ தனது அனுபவ உலகம் மற்றும் கற்பனை உலகை எவ்விதத் தயக்கமும் இன்றி இயல்பாக வெளிப்படுத்துதல்.
- ❖ பல்வேறு சூழல்களில் தன்னைத்தானே வெளிப்படுத்திட முயற்சி செய்தல் (பேசுதல்/குறிக்கோள் /படம் வரைதல் / குறிப்புகள் வழியாக)
- ❖ கதைகள், பாடல்கள் போன்றவற்றைக் கேட்பதில் ஆர்வம் கொள்ளுதல்; மேலும், அவற்றைக் கேட்டல், கூறுதல், ஒப்புவித்தல் ஆகியவற்றில் மகிழ்ச்சி கொள்ளுதல்.
- ❖ தாம் பார்த்த, கேட்ட மற்றும் படித்த செயல்களின் நிகழ்வுகள் குறித்துத் தங்களின் சொந்த மொழியில் வெளிப்படுத்துதல்; மேலும் அவை குறித்துக் கருத்தாடல் புரிதல்,...
- ❖ தாங்கள் படித்த / கேட்டவற்றைப் புரிந்துகொண்டு அவற்றைப் பேச்சு / எழுத்து வடிவில் தங்கள் சொந்த நடையில் வெளியிடல்.

- ❖ ஓவியத்தைத் தங்களது தன்னுணர்ச்சி வெளிப்பாட்டின் ஊடகமாகப் பயன்படுத்தல்
- ❖ தங்களுக்கு விருப்பமான கதைப் புத்தகங்கள் / பாடநூல்களை நூலகம் அல்லது பிற வள மூலங்களிலிருந்து (புத்தகப் பூங்கொத்து, விளம்பரத்தட்டி, குழந்தைகளுக்கான இதழ்கள், சைகைமொழி, பிரெய்லி எழுத்துக்கள்) தேடி எடுத்துப் படித்தல்,
- ❖ பல்வேறு தலைப்புகள் குறித்துப் பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுதல்.
- ❖ ஒருவரது கற்பனையின் அடிப்படையில் கதை / பாடல் எழுதுதல்.
- ❖ பாடப்பொருள் பற்றிய பகுதியை நுட்பமாக நன்கு ஆய்ந்து அதன் மையக்கருத்தைப் புரிந்துகொள்ளல்.
- ❖ சூழல்களின் துணைகொண்டு புதிய சொற்களின் பொருண்மையை அறிதல்.
- ❖ விருப்பமான பாடத்தைத் தேர்ந்தெடுத்து அதைப்பற்றி எழுதுதல்.
- ❖ பல்வேறு நிறுத்தக்குறிகளின் பயன்பாட்...
- ❖ விருப்பமான பாடத்தைத் தேர்ந்தெடுத்து அதைப்பற்றி எழுதுதல்.
- ❖ பல்வேறு நிறுத்தக்குறிகளின் பயன்பாட்டைப் புரிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்தல்.
- ❖ நோக்கம் மற்றும் சூழலுக்கு ஏற்ப பொருத்தமான சொற்களை மற்றும் தொடர் அமைப்புகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல்
- ❖ புதியசொற்களுக்குப் பொருண்மையைப் பொது / பட அகராதிகள் மூலம் கண்டறிதல்.
- ❖ மொழியின் சந்தம் மற்றும் ஒலி இயைபைப் புரிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்துதல்.
- ❖ பள்ளிமொழிக்கும் வீட்டு மொழிக்கும் இடையேயான தொடர்பை உருவாக்குதல்.

**1.3.தமிழ் பாடத்தில் சுற்றல் விளைவுகள்:உயர் தொடக்கநிலை**

மாணவர்கள் தொடக்கநிலையில் படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொண்டபின் கற்கிறார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், உயர்தொடக்கநிலையில் அவர்கள் புதிய புத்தகங்களைப் படிக்கவும் புதிய கருத்தமைவுகளைப் புரிந்துகொள்ளவும் உணர்வுப் பூர்வமாக ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். (தொடக்கக் நிலையில் அறிவுக்களமும், உயர்தொடக்கநிலையில் உணர்வுக்களமும் கற்றல் செயல்முறையில் நடத்தை மாற்றத்தைத் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றன என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகிறது). அவர்கள் தெரிந்த கருத்தமைவுகளையும் நூல்களையும் பிறவற்றையும் கற்று, அவற்றைத் தாம் முன்பு கற்றவற்றோடு தொடர்புபடுத்தப் பேரார்வம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

அவர்கள் செய்தித்தாள்களில் அச்சிடப்பட்டவற்றைப் படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். தாம் படித்த செய்தி,கட்டுரை, கதை மற்றும் கூற்றுகளின் வழி உணர்த்தப்படும் கருத்துகள் மென்மையான ஆலோசனையாகக் கூறப்படுவதையும், அவற்றின் முழுமையான பொருளையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கல்வி நிலையை (உயர்தொடக்கநிலை) அடைந்த பிறகு மாணவர்கள், வெவ்வேறு நோக்கங்களுக்கு வெவ்வேறான படித்தல் எழுதுதல் முறைகள் உள்ளன என்பதைப் புரிந்துகொண்டவர்கள் ஆகிறார்கள்; அதாவது, ஒரு விளம்பரம் படிப்பது என்பது செய்திப் பலகை அல்லது அறிவிக்கையைப் படிப்பதில் இருந்து வேறுபட்டது.

நாம் எழுதுவதைப் படிப்பவர் யார்? அதாவது, நாம் யாருக்காக எழுதுகிறோம்? நமது பள்ளி விளையாட்டு விழா பற்றிய தகவலை அறிவிப்புப் பலகை வழி தெரிவிக்க வேண்டுமெனில், 'படிப்போர்' மாணவர், ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்கள் ஆவர். ஆனால், அதே தகவலைப் பெற்றோருக்கும்

சமூக உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் எனில் அவர்களும் படிப்போர் ஆவர்.

இரு சூழலிலும் தகவல் தெரிவிக்கும் மொழியும், எழுத்துநடையும் சூழல்களையும் கருத்தமைவுகளையும் எழுத்துவழி வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கிறோம். இதுவே உயர்தொடக்கநிலையில் எழுதுதல் திறன்களை வளர்ப்பதன் முதன்மையான நோக்கமாகும்.

மேலும் உயர்தொடக்கநிலையில் மாணவர்கள் பல்வேறு செய்திக்கட்டுரைகளைப் படித்து அவற்றில் வெளிப்படும் முதன்மையான கருத்துகளையும், ஒருசார்புத்தன்மை (Prejudiced), துன்ப நிகழ்வுகளையும் இனம்காண இயலும் தன்மை உடையவர்களாக இருத்தல் வேண்டும். இந்நிலையில் மாணவர்கள் ஒரு மொழி தோன்றிய இடம், மொழிக்கான பொருள், படைப்புகள் போன்றவற்றைப் பகுப்பாய்வு செய்து தன்னம்பிக்கையுடனும் தெளிவாகவும் விளக்கம் அளிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

அவர்கள் ஒரு மொழியைப் புத்தாக்க வழியிலும், ஆக்க வழியிலும் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு கலைத்திட்டம் தொடர்பான எதிர்பார்ப்புகள், கற்பித்தல் கற்றல் முறைகள் மற்றும் கற்றல் விளைவுகள் இங்கே சுட்டிக் காட்டப்படுகின்றன. இங்கே பட்டியலிடப்பட்டுள்ள தமிழ்மொழியின் கற்றல் விளைவுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை மற்றும் அவை மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழித் திறன்களைப் பெறவேண்டும் என்பதையும் சுட்டுவனவாக உள்ளன.

ஒரு கட்டுரையைக் கேட்டல் அல்லது படித்தல் திறனுடன், அதுபற்றி மாணவர்கள், ஒருவரிடம் எதிர்வினையை வெளிப்படுத்தவும், வினாக்கள் எழுப்பவும் திறன் பெறுதல் வேண்டும். மேலும் இதனோடு தொடர்புடைய பேசுதல் மற்றும் கேட்டல் திறன்களோடு தொடர்புபடுத்தும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். எதிர்வினை வினாக்கள், குறிப்புரைகள் (remarks) போன்றவை எழுத்து வடிவிலும் அளிக்கப்படலாம். இவ்வாறு மொழிப்பாட வகுப்பறையில் கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் திறன்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாக உள்ளன.

இக்கலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவதில் பொருத்தமான கற்றல்முறைகள் இன்றியமையாப் பங்காற்ற உள்ளன. ஏற்றதொரு கற்றல் முறையைப் பின்பற்றாமல் விரும்பத்தக்க கற்றல் விளைவுகளை அடைதல் இயலாது.

### 1.4 கலைத் திட்டம் தொடர்பான எதிர்பார்ப்புகள்:–

இக்கலைத்திட்டம் தொடர்பான எதிர்பார்ப்புகள் யாவும் நாடு முழுவதும் தமிழை முதல் மொழியாகவோ, இரண்டாம் மொழியாகவோ கொண்டு பயிலும் குழந்தைகளை மனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

- எந்தவொரு புதிய கட்டுரை / நூல் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளும் பேரார்வம்.
- செய்தித்தாள்கள் / இதழ்கள் போன்றவற்றில் வெளியிடப்படும் செய்திகள் மற்றும் கட்டுரைகளை அறிதல் மற்றும் புரிதல்.
- சமூகப் பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய தமது விருப்பத்தை வெளிப்படுத்துதல்.
- கேட்ட/படித்த கட்டுரைகளை அறிந்து, புரிந்து விளக்குதல்.

- ❖ தமது அல்லது பிறரது அனுபவங்களைப் பேசுதல் /கேட்டல் / படித்தல் /எழுதுதல். [வாய்மொழியாகவோ / எழுத்து வடிவிலோ / சைகை மொழியிலோ]
- ❖ காட்சி கேள்விப் பொருள்களான குழந்தை இலக்கியங்கள், இதழ்கள்,தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணையத்தளச் செய்திகள், நாடகம், திரைபடம் போன்றவற்றைப் பற்றியும் தமது நோக்கினைக் கல்வி நிலைக்கு ஏற்ப வெளிப்படுத்துதல்
- ❖ கதைகள், பாடல்கள், கட்டுரைகள், நாட்குறிப்புகள் போன்ற வெவ்வேறு வகையான இலக்கியங்களைப் புரிந்துகொண்டு மகிழ்ச்சியடைதல்/அனுபவித்தல்
- ❖ அன்றாட வாழ்வியல் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தப்படும் கட்டமைப்புடைய/ கட்டமைப்பற்ற மொழியைப் புரிந்துகொள்ளுதல்
- ❖ மொழி/ இலக்கியத்தின் பல புதுமையான வெளிப்பாடுகளைப் புரிந்துகொள்ளல், நயம்பாரட்டல்.
- ❖ தமிழ்மொழியில் வெளிப்படுத்தப்படும் கருத்துகளின் தமிழ்மொழியில் பின்புலமான, தருக்கத்தைப் புரிந்துகொள்ளுதல்.
- ❖ ஒரு குறிப்பிட்ட பகுதியைப் புரிந்துகொண்டு அதன் பல்வேறு கூறுகள் / பிரச்சினைகள் மீதான தமது கருத்தை வழங்குதல்.
- ❖ பல்வேறு சூழல்களில் பயன்படுத்தப்படும் மொழியின் சந்தம், ஒலி இயைபு போன்ற புரிந்துகொள்ளுதல்.
- ❖ ஒருமொழியின்விதிகளை/விதிமுறைகளைப்புரிந்துகொள்ளல்/ பகுத்தாய்தல்.
- ❖ மொழியைப் புதிய சூழல்களில் / நேர்வுகளின் போது பயன்படுத்தல்.

### 1.5 கற்றல் விளைவு வரையறை

மொழிப்பாடத்தில் கற்றல் விளைவு என்பது திறன் கட்டமைப்பு அல்லது திறன் வெளிப்பாடாகும்.

**1.6. திறன்கள்**

- ❖ அடிப்படை திறன்கள்
- ❖ உயர்நிலைத்திறன்கள்

**1.6.1 அடிப்படை திறன்கள்:**

கேட்டல்

பேசுதல்

படித்தல்

எழுதுதல்

**1.6.2. உயர்நிலைத்திறன்கள்:**

கேட்டில், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற திறன்களுடன் கதை, பாடல்/ கவிதை, கட்டுரை, கடிதம் – போன்றவற்றில் நயம் பாராட்டல் உருவாகுதல் நீடித்தல், மாற்றியமைத்தல்

**1.7. கலை திட்டம் தொடர்பான எதிர்பார்ப்புகள்:**

- ❖ எந்த ஒரு புதிய கட்டுரை, நூல் போன்றவற்றைப் படித்து புரிந்து கொண்டு பேரா ஆர்வம் கொள்ளுதல்.
- ❖ செய்தித்தாள்கள், இதழ்கள் போன்றவற்றில் வெளியிடப்படும் செய்திகள் மற்றும் கட்டுரைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் புரிந்து கொள்ளுதல்.
- ❖ சமூக பயன்பாட்டு விழுமியங்கள் பற்றிய தமது விருப்பத்தை வெளிப்படுத்துதல்
- ❖ கேட்ட, படித்த கட்டுரைகளை அறிந்து மற்றும் புரிந்து விளக்குதல்
- ❖ தமது அல்லது பிறரது அனுபவங்களைப் பேசுதல், கேட்டல், படித்தல் மற்றும் எழுதுதல்
- ❖ காட்சி கேள்வி கருவிகள், பொருள்கள், குழந்தை இலக்கியங்கள் இதழ்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இணையதள செய்திகள் நாடகம் மற்றும் திரைப்படம் போன்றவற்றைப் பற்றிய தமது நோக்கினை கல்வி நிலை கேட்ப வெளிப்படுத்துதல்

- கதைகள், பாடல்கள், கட்டுரைகள் மற்றும் நாட்குறிப்புகள் போன்ற வெவ்வேறு வகையான இலக்கியங்களைப் புரிந்து கொண்டு அனுபவித்து மகிழ்ச்சி அடைதல்
- அன்றாட வாழ்வில் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தப்படும் கட்டமைப்பு உடைய மற்றும் கட்டமைப்பற்ற மொழியைப் புரிந்து கொள்ளுதல்
- மொழியில் இலக்கியத்தின் பல புதுமையான வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்ளல் மற்றும் நயம் பாராட்டல்
- தமிழ் மொழியில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களின் பின்புலமான தாக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்
- ஒரு குறிப்பிட்ட பகுதியைப் புரிந்து கொண்டு அதன் பல்வேறு கூறுகள் பிரச்சனைகள் மீதான தமது கருத்தைக் கூறுதல்
- பல்வேறு இலக்கிய வடிவங்களில் பயன்படுத்தப்படும் ஒலியின் சந்தம் மற்றும் ஒலி இயல்பு போன்ற நுட்பமான கூறுகளைப் புரிந்து கொள்ளுதல்
- ஒரு மொழியின் இலக்கண விதிகளை விதிமுறைகளைப் புரிந்து கொள்ளல், பகுத்தாய்தல்
- மொழியைப் பற்றிய புதிய சூழல்களின் தேர்வுகளின் போது பயன்படுத்துதல்

**1.8.கற்றல் நோக்கங்கள்:**

ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடப்பொருளைக் கற்பிக்கும் பொழுது அப்பாடப் பொருள் மூலம் மாணவர்கள் பெறவேண்டிய திறன்களே கற்றல் நோக்கமாகும்.

**1.9. கற்றல் விளைவுகள்**

கற்றறிந்த பின்னர் மாணவரிடம் வெளிப்பட வேண்டிய நடத்தை மாற்றம், மாணவர் நிலையில் அந்தந்தப் பாடத்தில் அடைந்திருக்கவேண்டிய திறன்கள் அன்றாட வாழ்வில் நடத்தி இயல்பாக வெளிப்படுத்த வேண்டிய திறன்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்தைத் தொடங்குவதற்கு முன் ஓர் ஆசிரியர் அப்பாடத்தில்

மாணவர்கள் பெறவேண்டிய அறிவுச்சார் மாற்றங்களை இலக்குகளாக நிர்ணயித்து அவற்றை கற்பித்தல் நடைமுறையாக கையாள்வதாகும்.

### 1.10. கற்றல் நோக்கம் மற்றும் கற்றல் விளைவு – வேறுபாடு

| கற்றல் நோக்கம் | கற்றல் விளைவு |
|---|---|
| ❖ உள்வாங்குதல்<br>❖ கற்றலின்அளவை குறிப்பது<br>❖ ஆசிரியர் சார்ந்தது<br>❖ துல்லியமாகஅளவிட இயலாது | ❖ வெளிப்படுத்துதல்<br>❖ கற்றல் அடைவின் அளவை குறிப்பது<br>❖ மாணவர் சார்ந்தது<br>❖ துல்லியமாக அளவிடக் கூடியது |

### 1.11. கற்றல் விளைவில் உள்ளடங்கியது

- ❖ செயல் வினைச்சொற்கள்
- ❖ சூழல்
- ❖ பாடப் பொருள்

### 1.12. கற்றல் விளைவின் அமைப்பு முறை

கற்றல் விளைவுகள் பாடவாரியாக வகுப்பு வாரியாக வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கற்றல் விளைவும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட திறன்களைப் பெற்றிருக்கலாம். ஒவ்வொரு திறனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நுண்திறன்களைப் பெற்று இருக்கலாம். மொழிப்பாடம் திறன் சார்ந்தது.

**திறன்:**

வகுப்பறை வாழ்வியல் அனுபவத்தின் துணைக்கொண்டு பாடப்பொருள் மற்றும் வாழ்வியல் சார்ந்து, மாணவர் தமது நடத்தையில் வெளிப்படுத்தும் பண்பு திறன் எனக் குறிப்பிடப்படுகின்றது.

**நுண் திறன்கள்**

ஒரு குறிப்பிட்ட திறனை பெற அதனை சிறு சிறு அளவிலான நுண்திறன்களாகப் பகுத்து மேலும், அவற்றை வெளிப்படுத்தும் நடத்தைக் கூறுகளை நுண்திறன் எனலாம்.

**செயல் வினைச்சொற்கள்**

- ❖ கலந்துரையாடல்
- ❖ வெளிப்படுத்துதல்
- ❖ பயன்படுத்துதல்
- ❖ தொகுத்தல்
- ❖ இனம் காணல்
- ❖ தேடிக் கண்டறிதல்
- ❖ நயம் பாராட்டுதல்
- ❖ படித்தல்
- ❖ எழுதுதல்
- ❖ முடிவு செய்தல்
- ❖ ஊகித்தறிதல்

**சூழல்**

- ❖ குறிப்பிட்ட சூழல்
- ❖ பல்வேறு சூழல்
- ❖ தன்னைச் சுற்றி அமைந்துள்ள சூழல்

**தமிழ் உயர்த் தொடக்க வகுப்பு கற்றல் விளைவுகளின் எண்ணிக்கை:**

| | | |
|---|---|---|
| 6 | – | 20 |
| 7 | – | 22 |
| 8 | – | 23 |
| 9 | – | 25 |
| 10 | – | 25 |

**கற்பித்தல் முறைகள்:**

- ❖ விளையாட்டு முறை
- ❖ நடிப்பு முறை
- ❖ விதி வரும் முறை
- ❖ விதி விளக்க முறை
- ❖ செய்து காட்டல் முறை
- ❖ பகுத்தறி மற்றும் தொகுத்தறி முறை
- ❖ எழுதுதல்
- ❖ கலந்துரையாடல்
- ❖ பங்கேற்று நடுத்தல்

**மதிப்பீடு /கேள்வி:**

**1.13 உயர் நிலைத் திறன் வினாக்கள் அமைத்தல்**

மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்ட பாடறிவு, திறன்களின் வளர்ச்சி, முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு ஒவ்வொரு ஆசிரியருக்கும் தேவைப்படுகிறது. அந்த அறிவைத் தரும் செயல்முறையை மதிப்பீடு செய்வது. இது கற்றல் கற்பித்தலின் ஒரு அங்கமாக செயல்படும்போது ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் முறைகளைச் செறிவூட்டவும் கற்பிக்கப்படும் பாடப்பொருளில் மாற்றங்களை ஏற்படுத்தவும் கல்வியினை செயல்பாடுகளை வடிவமைக்கவும் உதவி புரியும் தரமான மதிப்பீடு என்பது தரமான வினாக்களை வடிவமைப்பதில் அடங்கி உள்ளது. மாணவர்களின் வயது அறிவு வளர்ச்சி செயல் திறன்களின் அடிப்படையில் வினாக்கள் அமைக்கப்படும் போது மாணவர்களின் உண்மையான அடைவு நிலையை அறிந்து கொள்ள முடியும்.

நம் பாடக் கருத்துகளில் அடங்கியுள்ள கற்றல் விளைவுகளைச் சோதிக்கும் வகையில் புரிதல் பயன்படுத்துதல் மற்றும் காரணம் அறிதல் போன்ற திறன்களின் அடிப்படையில் வினாக்களை வடிவமைக்கும்

திறன்களை ஆசிரியர் புரிதலே இந்தச் செயலாராய்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

**1.14.கற்றல் விளைவுகள், கற்றல் கற்பித்தல் செயல்பாடு மற்றும் மதிப்பீடு**

கொடுக்கப்பட்டுள்ள பாடத்திற்கு ஏற்ற கற்றல் விளைவுகள் தேர்ந்தெடுத்து அதனை மாணவர்கள் அடைய செய்ய ஏதுவான கற்றல் செயல்பாடுகளை வடிவமைத்து கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுத்திய பின்னர் கற்றல் விளைவுகளைச் சோதிக்கும் வினாக்களை வடிவமைப்பதின் மூலம் மாணவர்கள் கற்றல்விளைவை அடைந்துள்ளார்கள் என்பதைக் கண்டறிய முடியும்.

**1.15 சிந்தனைத் திறன்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களை உருவாக்குதல்**

- ❖ மதிப்பிடல் மற்றும் தொகுத்தல் – உயர்நிலைத்திறன் வினாக்கள்
- ❖ பகுத்தல் மற்றும் பயன்படுத்துதல் – நடுநிலை வினாக்கள்
- ❖ புரிதல் மற்றும் அறிதல் – எளிய நிலை வினாக்கள்

**எளிய சிந்தனை திறன்வினாக்கள்:**

அறிதல் வகை வினாக்கள் மற்றும் எளிய புரிதல் வகை வினாக்கள் ஆகும்

**நடுநிலைச் சிந்தனை திறன் வினாக்கள்**

புரிதல் மற்றும் பயன்படுத்துதல் வகை வினாக்கள் ஆகும்

**உயர்நிலை சிந்தனை திறன் வினாக்கள்**

பகுத்தல், தொகுத்தல் மற்றும் மதிப்பிடல் இவை மூன்றும் தேசிய ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சி பயன்படுத்துதல் என்ற பிரிவில் சேர்ந்து வகைப்படுத்தியுள்ளது. இவற்றை உயர்நிலை சிந்தனை என்கின்றோம்.

**அறிதல் வகை வினாக்களை இனம்காண சில எடுத்துக்காட்டுகள்**

பட்டியலிடு, வரையறு, கூறு, விவரி, அடையாளம், காட்டு, காண்பி, அடையாளக் குறியீடு, சேகரி, அட்டவணைப்படுத்து, எடுத்து எழுதுக, பெயர், யார், எப்போது, எங்கே

**புரிதல் திறன் வினாக்கள் இனம்காண சில எடுத்துக்காட்டுகள்**

உட்பொருளை வெளிப்படுத்து, சுருக்கு, வேறுபடுத்து, கணிக்க, தொடர்புபடுத்துக, பகுத்தறிக, மதிப்பீடு, வித்தியாசங்களை எடுத்துக்காட்டு, விவாதி, விரி, பொருத்துக.

**பயன்படுத்துதல் திறன் கேள்விகளுக்கான சில எடுத்துக்காட்டுகள்**

உபயோகி, செய்து காட்டு அல்லது செயல் விளக்கமளி, ஒருமை, கணக்கிடு, முடி, எடுத்துக்காட்டுடன் விளக்கு, திருத்து, மாற்று.

**பகுத்தல்**

ஒரு முழுமை தொகுதியில் இருந்து பல்வேறு கூறுகளாகப் பிரித்தல் பகுத்தல் ஆகும். ஒன்றறில் அடங்கிய ஆனால் வெளிப்படையாக இல்லாத கூறுகளை ஒரு பகுதியில் உள்ளவற்றின் தொடர்புகளை வெளிப்படுத்துதல்.

**தொகுத்தல்**

ஒரு தகவல் தொகுதியில் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை கருத்துகளை வேறுபடுத்துதல் முதல் எனப் பகுத்தறி செயல்களைத் தொகுத்தல் பல கருத்துக்களை இணைத்து எழுதுதல், பட்டறிவு, முறைப்படக் கூறுதல், கருதுகோள்களைச் சரிபார்த்தல், சான்றுகளைத் தருதல் ஆகியவை தொகுத்தல் ஆகும். மதிப்பிடல் என்பது ஒன்றைப் பற்றிய முடிவினை முழு வெளிச்சான்றுகள்கொண்டு தருதல் ஆகும். கொள்கையின் தன்மையைக் கொண்டு நிறுவுதல், முடிவுகளின் தன்மையைக் கூறுதல், திறனாய்வு செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**சிறந்த வினாவிற்கான பண்புகள்:**

கற்றல் விளைவைச் சோதித்தல், வினாவின் நோக்கத்தில் தெளிவு, வினா வடிவமைப்பில் தெளிவு, வினாவின் பிழையற்ற தன்மை, மாணவர்களின்

வயதுக்கேற்ற வினா அமைத்தல், ஆர்வம் மட்டும் சிந்தனையைத் தூண்டும் வினாக்களாக இருத்தல்.

**சாக்ரடீஸ்:**

கற்பித்தல் என்பது கேள்விகளைக் கேட்கும் கலைத்தான்

கை கிளாஸ்டன்: நல்ல கற்றல் கேள்விகளுடன் தொடங்குகிறது, பதல்களோடு அல்ல

**ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

- ❖ கடினமான சூழ்நிலைகளுக்கிடையே தான நக்கான வாய்ப்பிருக்கிறது. அதில் முக்கியமானது என்னவென்றால் கேள்வி கேட்பதை நாம் நிறுத்த கூடாது.
- ❖ நாம் ஏன் கேள்விகளைக் கேட்கிறோம் என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? நமக்குத் தெரிந்தவற்றிலிருந்து கேள்விகளைக் கேட்கிறோம்.
- ❖ சிறு குழந்தைகள் தங்களைச் சுற்றி பார்க்கும் மற்றும் அனுபவிக்கும் மிகச் சிறந்தவற்றைப் பற்றி ஆர்வத்துடன் கேள்விகளைக் கேட்கிறார்கள்.
- ❖ கேள்விகள்தான், நம் மனதில் ஆர்வத்தைத் தூண்டும், பகுத்தறிவுக்கு தேவைப்படும் தகவலகள், நாம் புரிந்து கொள்ளாத தகவல்கள் மற்றும் புரிந்து கொள்ளாத தகவல்கள் மற்றும் புதிதாக ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கான பதில்களை கேள்விகள்தான் வழங்குகின்றன.
- ❖ கேள்விகள்தான், நாம் வாழக்கையை எவ்வாறு கையள்வது என்பதைப் பற்றி நம்மை சிந்திக்க வைக்கின்றன. மேலும் சில நிகழ்வுகள் ஏன் நடக்க வேண்டும் என்பதைப் பற்றிய சிறந்த புரிந்துணர்வையும் மேம்படுத்துகின்றன.

**ஆசிரியர்கள் ஏன் கேள்விகளைக் கேட்கவேண்டும்:**

- கற்றலில் ஆர்வம் மற்றும் ஈடுபாடு ஏற்படுத்தவும், சவால்கள் மற்றும் சிக்கல்களை எதிர்கொள்ளவும்
- ஏற்கெனவே தெரிந்தவற்றைச் சரிபார்த்து, அதைப் புதிய பாடத்துடன் அல்லது தலைப்புடன் இணைத்துப பார்க்கவும்
- ஏற்கெனவே தெரிந்தவற்றைச் சரிபார்த்து, அதைப் புதிய பாடத்துடன் அல்லது தலைப்புடன் இணைத்துப் பார்க்கவும்
- புதியதாக புரிந்துகொள்ளவும் மற்றும் புதிய பொருளை உருவாக்கவும், ஏற்கானவே உள்ள அறிவையும் அனுபத்தையும் தூண்டி, நிணைவுப்படுத்தவும், மற்றும் அவற்றை பயன்படுத்தவும் கேள்விகளைக் கேட்கிறோம்.
- கற்றலில், ஆர்வம் மற்று ஈடுபாடு ஏற்படுத்தவும், சவாலகள் மற்றும் சிக்கல்களை எதிர்கொள்ளவும்
- ஏற்கனவே தெரிந்தவற்றைச் சரிபார்த்து, அதைப் புதிய பாடத்துடன் அல்லது தலைப்புடன் இணைத்துப் பார்க்கவும்.
- மாணவர்கள் முக்கியமான கருத்துகள் மற்றும் சிக்கல்களில் கவனம் செலுத்தவும்
- மாணவர்களின் சிந்தனையைப் பகுப்பாயவு செய்து மதிப்பீடு செய்யும் அளவிற்கு விரிவுபடுத்தவும்.
- பகுத்தறிவைப் பய்ன்படுத்தவும், சிக்கலைத் தீர்க்கவும், மதிப்பீடு செய்யவும் மற்றும் கருதுகோள்களை உருவாக்கவும்
- மாணவர்கள் கற்றுகொண்ட முறையைப் பற்றிய கற்றலை மேமப்டுத்தவும் கேள்விகளைக் கேட்கிறோம்.

**கேள்விகள் கேட்பதன் நோக்கம்:**

| வ.எண் | நிலைகள் | நோக்கங்கள் |
|---|---|---|
| 1 | ஆர்வமூட்டல் | பாடத்தொடர்புகளை நினைவுபடுத்துதல் , நினைக்கூர்தல், ஊக்கப்படுத்துதல் |
| 2 | பாட வளர்ச்சி | கடினத்தன்மையின் அளவை சீராக்குதல் |
| 3 | பயிற்சி | விளக்கமளித்தல் |
| 4 | மீள்பார்வை | கற்பித்த பாடங்களை பயிற்சி செய்தல் |

**ஒரு நல்ல கேள்வியின் பண்புகள்:**

- சுருக்கமாகவும், சிந்தனையைத் தூண்டும்படியாகவும், சரியாக வழிகாட்டும்படியாகவும் இருக்க வேண்டும்.
- பொருத்தமானதாகவும், கற்றல் நோக்கங்களுடன் தொடர்புபடுத்தும்படி இருக்கவேண்டும்.
- தெளிவாகவும், நேரடியாகவும் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய பொதுவான சொற்களைக கொண்டு உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்

**சிறந்த கேள்வி/ வினா:**

- கற்றல் நோக்கங்களை வலுப்படுத்தி அதை மேம்படுத்தும் வகையில் கேள்விக் கேட்க வேண்டும்.
- முக்கியமானவற்றைப் புரிந்துகொள்ளும் வகையில் மாணவர்களை ஈர்க்கவும் அல்லது பாடவளர்ச்சியின்போது கடினத்தன்மையின் அளவை சீராக்க ஒவ்வொரு நிலையிலும் கேள்விகளை கேட்க வேண்டும்.

- ❖ அனைத்து மாணவர்களையும் ஈடுப்படுத்தும் வகையில் கேள்வி இருக்கவேண்டும்.
- ❖ மாணவர்கள் சொந்தமாக சிந்திக்கத் தூண்டும்படி கேள்விகள் இருக்கவேண்டும்
- ❖ நியாயப்படுத்துதல் மற்றும் காரணங்களைக் கண்டறிய ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ மாணவர்களின் கருத்துக்கள் மற்றும் சிந்தனைகள் மதிக்கப்பட்டு நம்பிக்கையான சூழ்நிலையை உருவாக்ககு வகையில் கேள்வி கேட்கவேண்டும்
- ❖ ஏற்கனவே கற்றுக்கொண்ட்ட மற்றும் புதிதாக கற்கவுள்ள வற்றிற்கு இடையே உள்ள தொடர்பைக் காட்டும் வகையில் கேள்விக்கேட்கவேண்டும்
- ❖ மாணவர்களை யூகிக்கவும் மற்றும் அனுமானிக்கவும் ஊக்குவிக்கும் வகையில் கேள்வி கேட்க வேண்டும்
- ❖ மாணவர்களை நாம் கேள்விகளைக் கேட்கும் அதேநேரத்தில் அவர்களை கேள்வி கேட்க செய்யும் ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ மாணவர்கள் ஆசிரியரிடம் கேள்விக்கேட்பதோடு அவர்களுக்குள் ஒருவரையொருவர் கேள்விகேட்டு பதிலளிக்கவும் ஊக்குவிக்க வேண்டும்.

**கேள்விகளின் நிலைகள்:**

- ❖ ஒரு ஆய்வினபடி ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளில் 80% எளிய சிந்தனைக் கேள்விகளாகும், அவை உண்மையில் மிக எளிமையான வினாக்களாகும்.
- ❖ அறிவு மற்றும் புரிதலைச் சோதிக்கும் கேள்விகளை மதிப்ட்டுவது எளிது.
- ❖ புரிதலைச் சோதிக்கும் கேள்விகளை மதிப்பொடுவது எளிது

- ❖ அடுத்த நிலை பயன்பாடு ஆகும். மேலும் ஒரு சிக்கலைத் தீர்க்க மாணவர்கள் பெற்ற அறிவைப் பயன்படுத்தவேண்டும்.
- ❖ உயர்சிந்தனை வினாக்கள் மற்றும் பதில்கள் பகுப்பாய்வு மதிப்பீடு மற்றும் உருவாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- ❖ உயர்சிந்தனை வினாக்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட சரியான பதில்களை உடையவையாகும். எனவே இக்கேள்விகளைமதிப்பிடுவது மிகவும் கடினம்.

**தொடக்கநிலை சிந்தனை கேள்விகள்**

தீர்மானிக்கப்பட்ட பதில்களைக் கொண்ட கேள்விகள் **– (Lower Order Closed Questions)**

என்ன? யார்? எப்பொழுது? எத்தனை?

what? who? when? how many?

## 1.15. அணிகள்

**எடுத்துக்காட்டு உவமை அணி**:

நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு

**விளக்கம்:**

தான் சேர்ந்த நிலத்தின் இயல்புக்கு ஏற்பத தண்ணீரின் தன்மை வேறுபடும் அதுபோல மக்களுடைய அறிவும் அவரவர் சேர்ந்த இனத்தின் இயல்புக்கேற்ப அமையும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும்–உவமை (உவமானம்)

மாந்தர்க்கு இனத்தியல்ப தாகும் – பொருள் (உவமேயம்)

சேந்ததன் இயல்பாதல் – பொதுத்தன்மை

**இக்குறட்பாவில் உவமையும் பொருளும் தனித்தனியாக நிற்க, இடையில் 'போல' என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளது. உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய இடையில் உவம உருபு வெளிப்படையாக இல்லாமல் மறைந்து வருவது எடுத்துக் காட்டு உவமை அணியாகும்.**

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி**

**மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு**

**விளக்கம் :**

மணற்கேணியானது எவ்வளவு ஆழமாகக் தோண்டுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நீர் சுரக்கும். அதே போல மனிதர் எவ்வளவுக்கு எவ்வளவு கற்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களது அறிவு பெருகும். இங்கு மணற்கேணி தோண்டப்படுவது உவமையாகும். மனிதர் கற்பது உவமேயம் ஆகும். போல என்னும் உவம உருபு வெளிப்பட்டு வரவில்லை. மேலும் ஒரு உதாரணம்

**அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு**

**உவமை அணி**

**குறள்:**

வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்

கோலொடு நின்றான் இரவு

**விளக்கம் :**

செங்கோல் உடைய அரசன் ஒருவன் தன் அதிகாரத்தினைப் பயன்படுத்தி வரிஎன்ற பெயரில் மக்களிடம் பணம் வசூலிப்பது, வேல் முதலிய ஆயுதங்களைக் கொண்ட ஒரு வழிப்பறி செய் வதற்குச் சமம் ஆகும்.

உவமானம் – வேலொடு நின்றான் இடுஎன்றது.

உவமேயம் – கோலொடு நின்றான் இரவு.

உவம உருபு – போலும்

மேலும் ஒரு உதாரணம்

அகழ்வாரை தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார் பொறுத்தல் தலை

**இல்பொருள் உவமையணி**

இயற்கையில் இல்லாத ஒன்றை (ஒருபொருளை) இருப்பது போலக் கற்பனை செய்துகொண்டு அக்கற்பனைப் பொருளை உவமையாக்குவதே இல்பொருள் உவமையணியாகும். எ.கா. "காளை மாட்டிலேயே பால்கறப்பான்" எனச் சிலரது செயலுக்கு உவமானம் கூறுவார்களே அதுபோல. காளைமாடு ஒருபோதும் பால்கறக்காது என்றாலும் அவனது செயலுக்கு அப்படி இல்லாத ஒன்றை உவமாணமாய் கூறுவதுதானே அது.

**குறள்:**

**அன்பகத் தில்லார் உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**

**வற்றல் மரந்தளிர்த் தற்று**

**பொருள்**

அன்பு அகத்தில்(உள்ளத்தில்) இல்லாதவர் வாழும் வாழ்வு, கடும் பாலைவனத்தில் பட்டுப்போன மரம் துளிர்ப்பது போல் ஆகும் என வள்ளுவர் கூறுகிறார். அதாவது வலிமையான ஒரு பாலைவனத்திலே பட்டமரம் தளிர்த்ததைப் போன்று அன்பில்லா உயிர்வாழ்க்கை தளிர்க்காது. அதாவது வலிமையான பாலைவனத்திலே பட்டமரம் தளிர்க்கவே தளிர்க்காது. அதே போலத்தான் அன்பில்லா வாழ்க்கையும். கற்றல் விளைவுகள் சார்ந்த

செயல்பாட்டினையும், உயர்நிலைத் திறன் சார்ந்தவினாக்களை வடிவமைக்கும் திறனை மேம்படுத்துவதே இச்செயலாய்வின் நோக்கமாகும்.

**2. செயலாய்வின் தேவை மற்றும் முக்கியத்துவம்**

கல்வியில் தரம் மேம்பாடு என்பது கற்போரிடம் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கொண்டதாகும். எனவே கல்வி அமைப்பானது ஒவ்வொரு குழந்தையும் கல்வி கற்று முன்னேற்றம் அடைய தேவையான சாதகமான சூழலை உறுதிப்படுத்துதல் அவசியம். மேலும், ஆசிரியர்களுக்கு கற்றல் நோக்கம் மற்றும் கற்றல் விளைவுகள் இரண்டிற்கும் சரியான புரிதல் இல்லாமல் பாடப்பொருளைக் கற்பிக்கின்றனர். ஆனால், கற்றலில் விளைவு ஏற்பட்டிருக்கிறாத என்றால் இல்லை. பாடப்பொருளை எவ்வாறு கற்பிப்பது, எப்படி செயல்பாடுகளை வடிவமைப்பது என்பதில் ஐயம் ஏற்படுகிறது. எனவே, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்த பாடப்பொருளுக்கு செயல்பாடுகளை வடிவமைப்பதில் எந்த அளவிற்கு புரிதல் ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிவதே இந்தச்செயலாவின் நோக்கமாகும்.

**3.செயல் ஆய்விற்கான காரணங்கள்**

பள்ளிப்பார்வையின் போது ஆசிரியர்களிடம் கண்ட இடர்ப்பாடுகளின் அடிப்படையில் இத்தலைப்புத் தெரிவுசெய்யப்பட்டது. மேலும், ஆசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்த புத்தாக்கம் மற்றும் செயல்பாடுகள் கட்டமைக்க பயிற்சி தேவைப்படுகிறது. மேலும் மாணவர்களின் அடைவில் முன்னேற்றம் கற்றல் விளைவுகள் சார்ந்தே அமைகிறது. எனவே இச்செயலாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**கற்றல் விளைவு:**

**704, 709 ,710, 711, 712**

**4. தலைப்பு:** உயர்தொடக்க வகுப்பு தமிழாசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்த செயல்பாடுகளை வடிவமைத்து செயல்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல்

5. **செயலாய்வின் நோக்கம்:**

- ❖ கற்றல் விளைவுகள் சார்ந்த் செயல்பாடுகளை வடிவமைக்கும் திறனை வலுப்படுத்துதல்
- ❖ கற்றல் விளைவுகள் சார்ந்த பாடப்பொருளில் உயர் நிலை வினாக்கள் தயாரிக்கும் புரிதலை மேம்படுத்துதல்

**6. கருதுகோள்கள்:**

- ❖ கற்றல் விளைவுகள் சார்ந்த் செயல்பாடுகளை வடிவமைக்கும் திறன்வலுப்படும்.
- ❖ கற்றல் விளைவுகள் சார்ந்த பாடப்பொருளில் உயர் நிலை வினாக்கள் தயாரிக்கும் புரிதல் மேம்படும்.

**7. ஆய்வுமாதிரி:**

மத்தூர் மற்றும் பர்கூர் ஒன்றிய, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 20 தமிழ் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் இச்செயலாய்வு மாதிரிகளாக தேர்வு செய்யப்பட்டது.

**8. ஆய்வு வடிவமைப்பு:**

கீழ்க்காணும் முறைமைகளில் ஆய்வின் போக்கு அமைந்துள்ளது.

**8.1 ஆய்வுமுறை**

பரிசோதனை முறையில் (Experimental Method ) ஒற்றைக் குழு சோதனை

**8.2 ஆய்வுச் சார் கற்பிக்கும் முறைகள்**

- விதி வருமுறை
- விதிவிளக்கமுறை
- விளையாட்டு முறை

**8.3 ஆய்வு உத்திகள்**

- பங்கேற்று கற்றல் ( Role play)
- வலையொலி காணொளிகள் (Youtube Videos)
